FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318751

1. District மாவட்டம் **Tiruvannamalai** PS: காவல்நிலையம் **V&AC** Year: ஆண்டு **2026** FIR No.: முத.அ. எண் **05/2026** Date: நாள் **19.06.2026**

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.** Sections பிரிவுகள்: **7, 7 r/w 12**

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்: **Bharatiya Nagarik Suraksha Sanhita 2023** **106**

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **18.06.2026** Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் **Between 12.00 hrs and 21.00 hrs** Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம்

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **19.06.2026** Time : நேரம் **18.30 hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் **Vol - II** **19.00 Hrs**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **Computer Typed** **4 Kms North East**

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் **Regional Transport Office, Tiruvannamalai.**

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.Rajagadeesan** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **S/o.Raguraman**

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **Age-54** (d) Nationality : நாட்டினம் **Indian** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம

(f) Occupation : தொழில் **Special Tahsildar (Stamps)** (g) Address : முகவரி **Taluk Office, Tiruvannamalai**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1.Tr.K. Karunanidhi, aged.54/2026, Regional Transport Officer, Regional Transport Office, Tiruvannamalai.
2.Tr.P.Perumal, aged.51/2026, Motor Vehicle Inspector, Grade-1, Regional Transport Office, Tiruvannamalai.
3.Tr. S. Arul, Age 53/2026, S/o Selvaraj, Tiruvannamalai (Owner of Arul Driving School) (Private Individual).
4.Tr. A. Ajaydevagan, Age 25/2026, S/o Anand, Tiruvannamalai (Agent/Broker of Ajay Anand Driving School) (Private Individual).
5.Tr. A. Abdul Hakeem, Age 56/2026, S/o Abdul Hameed, Tiruvannamalai (Agent/Broker of Jayam Driving School) (Private Individual).

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முன்றிவிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

---

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved : ------
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any: ------
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது</u> திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 19.06.2026-ஆம் தேதி மாலை 18.30 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திருவண்ணாமலை தனிவட்டாட்சியர் (குறைவு முத்திரை கட்டணம்) திரு.இர.ஜெகதீசன் அவர்கள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு கொடுத்தார். அதன் விவரம் பின்வருமாறு நாள் 19.06.2026 அனுப்புநர் திரு.இர.ஜெகதீசன், தனி வட்டாட்சியர் (குறைவு முத்திரை கட்டணம்), வட்டாட்சியர் அலுவலகம், திருவண்ணாமலை. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. அய்யா, பொருள்: 18.06.2026-ஆம் தேதியன்று திருவண்ணாமலை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் சோதனை

- இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

19/06/2026

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

19.06.2026 at 20.00 hrs.

Name: பெயர் .....
Rank: நிலை ..... No. எண் .....

மேற்கொண்ட போது கைப்பற்றிய உரிமை கோராத மற்றும் கணக்கில் வராத முகாந்திரம் கூற இயலாத கையூட்டு பணம் என சந்தேகத்திற்கிடமாக இருந்த பணம் ரூ.75,000/- மற்றும் ஆவணங்களை மேல் நடவடிக்கைக்காக ஒப்படைத்தல் - சம்மந்தமாக. பார்வை: திடீர் ஆய்வின் போது தயாரிக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள், நாள் 18.06.2026. 18.06.2026-ஆம் தேதியன்று நான் பணியில் இருந்த போது திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்திரவுப்படி, திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவினருடன் இணைந்து திடீர் சோதனை மேற்கொள்ள துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் ஒரு அலுவலர் தேவைப்படுவதாகவும், உடனிருந்து அரசு சாட்சியாக செயல்பட வேண்டியுள்ளதாகவும் கூறி என்னை திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு நேரில் சென்று அறிக்கை செய்யுமாறும் கேட்டுக் கொண்டதன் பேரில், நான் காலை சுமார் 11.00 மணியளவில் காவல் ஆய்வாளரிடம் அறிக்கை செய்தபோது, அவர் என்னிடம் திருவண்ணாமலை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகன ஓட்டுனர் உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல், வாகனங்களின் பதிவு சான்றிதழ் வழங்குவதற்காக இடைத்தரகர்கள் (புரோக்கர்கள்) மூலம் மற்றும் நேரடியாக பொது மக்களிடம் லஞ்சம் பெறுவதாக வந்த தகவலின் அடிப்படையிலும், அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காக நேரடியாகவும் மற்றும் இடைத்தரகர்கள் (புரோக்கர்கள்) மூலமும் கையூட்டு பெறுவதாகவும் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலக கோப்புகள், முத்திரைகள் ஆகியன ஓட்டுனர் பயிற்சி பள்ளிகளில் பராமரித்து வருவதாகவும் கிடைக்க பெற்ற நம்பகமான இரகசிய தகவலின் பேரில் மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளும்போது துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் அரசுத்தரப்பு சாட்சியாக உடனிருக்குமாறு கேட்டுக்கொண்டனர். பின்பு மதியம் சுமார் 12.00 மணிக்கு நானும், காவல் ஆய்வாளர்கள் திரு.இரா.அருள்பிரசாத் மற்றும் திருமதி.A.ஹேமாமாலினி, காவல் குழுவினருடன் இணைந்து, திருவண்ணாமலை வேங்கிக்காலில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு வந்து திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதே சமயத்தில், வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் வெளியே மற்றும் மைதானத்தில் இருந்த நபர்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் தணிக்கைக்கு வந்ததாக தெரிந்தவுடன் அங்கிருந்த பொது மக்கள் மற்றும் இடைத்தரகர்கள் சிலர் சுமார் 50 நபர்கள் காம்பவுண்ட் ஏறிகுதித்து ஓடிவிட்டார்கள். அவர்களை பிடிக்க எத்தனித்தும் பிடிக்கமுடியவில்லை. இந்த அலுவலகமானது

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந்த அலுவலகத்தை சுற்றி சுற்று சுவர் கட்டப்பட்டு இரண்டு வழிகள் உள்ளது. பிரதானவாயில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. பிரதான வாயிலில் நுழைந்தவுடன் பெரிய வராண்டா உள்ளது. வராண்டாவின் நேரெதிரே நேர்முக உதவியாளரின் அறை சுமார்10'x10' என்ற அளவில் உள்ளது. அது கண்ணாடியால் தடுக்கப்பட்டுள்ளது. நேர்முக உதவியாளரின் அறையின் மேற்கே வட்டார போக்குவரத்து அலுவலரின் அறை அமைந்துள்ளது. அது சுமார் 25'x15' அளவுள்ள அறையாக உள்ளது. அறையின் தென்மேற்கு மூலையில் வட்டார போக்குவரத்து அலுவலரின் இருக்கை அமைந்துள்ளது. வட்டார போக்குவரத்து அலுவலரின் இருக்கைக்கு எதிரில் இரண்டு கம்ப்யூட்டர் டேபிள்கள் உள்ளன. அறையின் தென் கிழக்கு மூலையில் இரும்பு பீரோ ஒன்றும், அதன் அருகில் கழிவறையும் உள்ளது. வட்டார போக்குவரத்து அலுவலரின் அறையை ஒட்டியவாறு கிழக்கு பார்த்த வாசற்படியுடன் "A" Section அமைந்துள்ளது. அந்த அறையின் உள்ளே நுழைந்தவுடன் கண்ணாடி தடுப்புகளால் தடுக்கப்பட்டு, வடக்கு பார்த்த வாசற்படியுடன் நான்கு இருக்கைகள் அமைந்துள்ளன. அவை A-4, B-3, A-1, A-2 மற்றும் A-Superintendent இருக்கைகள் உள்ளன. பின்னர் நேர்முக உதவியாளரின் அறையின் அருகே 15'x15' அளவுள்ள தனி அறையும், அதன் அருகில் புகைப்படம் எடுக்கும் அறையும் அமைந்துள்ளன. அவை இரண்டும் வடக்கு பார்த்த வாசற்படியுடன் அமைந்துள்ளன. மேற்படி அறைகளின் எதிரில் பெரிய வராண்டா அமைந்துள்ளது. அந்த வராண்டாவின் வடக்கு பக்கம் கண்ணாடி தடுப்புகளால் தடுக்கப்பட்ட கணக்காளர் அறை உள்ளது. அந்த வராண்டாவில் வடக்கு கிழக்கு திசையில் B-Superintendent இருக்கை அமைந்துள்ளது. மேற்கு பார்த்த வாசற்படியுடன் கண்ணாடி தடுப்புகளால் ஆன அறை ஒன்று உள்ளது. அதில் பதிவு எழுத்தர் இருக்கை மற்றும் தட்டச்சர் இருக்கை அமைந்துள்ளன. பிரதான வாயிலை ஒட்டி கிழக்கு பக்கம் முதல் தளத்திற்கு செல்வதற்காக மாடிப் படிக்கட்டுகள் அமைந்துள்ளன. முதல் தளத்தில் கான்பரன்ஸ் ஹாலும், மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளரின் அறையும் அமைந்துள்ளன. மேற்படி கான்பரன்ஸ் ஹாலில் ஆவணங்கள் தரையில் பரவலாக வைக்கப்பட்டுள்ளன. இந்த திடீர் சோதனையை ஆரம்பிப்பதற்கு முன்பு வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.கி.கருணாநிதி மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.P.பெருமாள் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் முன்பாக சோதனைக்கு வந்த அலுவலர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டும் தங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டு தங்களிடம் எந்த

பணமும் இருப்பில் இல்லை என்று அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காட்டப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.கி.கருணாநிதி அவர்களை சோதனை செய்ய அவர்கள் ரூ.100/- வைத்திருந்தார். அதைப்பற்றி விசாரிக்க கைசெலவிற்காக வைத்திருப்பதாக கூறினார். பின்பு மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.P.பெருமாள் அவர்களை சோதனை செய்ய அவரிடம் ரூ.300/- இருந்தது. அதைப்பற்றி விசாரிக்க கைசெலவிற்காக வைத்திருப்பதாக கூறினார். பின்னர் அலுவலகத்தில் பணியில் இருந்த அலுவலர்களையும், பெண் அலுவலர்களை காவல் ஆய்வாளர் திரு.A.ஹேமாமாலினி அவர்கள் மூலம் தனித்தனியாக சோதனை செய்ய 1).திரு.ர.சுப்பிரமணி, கண்காணிப்பாளர் அவர்களிடம் ரூ.200/-மும், 2).திருமதி.ப.ஆதிலட்சுமி, கணக்கர் (உதவியாளர்) அவர்களிடம் ரூ.132/-மும், 3).திரு.சு.ஜாய்சன்லோகராஜ், இளநிலை உதவியாளர் அவர்களிடம் ரூ.700/-மும், 4).திரு.தி.சக்திவேல், இளநிலை உதவியாளர் அவர்களிடம் ரூ.180/-மும், 5).ச.சங்கீதா, இளநிலை உதவியாளர் அவர்களிடம் ரூ.310/-மும், 6).ச.கிருத்திகா, இளநிலை உதவியாளர் அவர்களிடம் ரூ.100/-மும், 7).சே.அருண்மொழி, தட்டச்சர் அவர்களிடம் ரூ.170/-மும், 8).கி.குணமதி, அலுவலக உதவியாளர் அவர்களிடம் ரூ.250/-மும் வைத்திருந்த பணத்தை பற்றி விசாரித்தும், தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் உள்ளதை ஒப்பிட்டு பார்க்க சரியாக இருந்தமையால் மேற்படி தொகைகளை தனிவட்டாட்சியர் அவர்கள் முன்பு திரும்ப அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் இன்று பணிக்கு அறிக்கை செய்த மோட்டார் இயக்கூர்தி ஆய்வாளர் நிலை-2 திரு.L.டேவிட் என்பவரும் உடனிருந்தார். மேலும், வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்த தனிநபர்கள் மற்றும் இடைத்தரகர்கள் ஆகியோர்களின் விவரம் பின்வருமாறு.

வ.எண்.	தனிநபர்கள் மற்றும் இடைத்தரகர்கள் (பெயர், விலாசம்)	சோதனையிட அவர்களிடம் இருந்த பணம்	திருப்பி கொடுக்கப்பட்ட பணம் / கைப்பற்றப்பட்ட பணம்.
1.	திரு.ஆர்.எம்.ஜி.ஆர், வயது.49/2026, த/பெ ராமசாமி, பிள்ளையார் கோயில் தெரு, கொ.அண்ணாநகர், குப்பநத்தம், செங்கம் வட்டம், திருவண்ணாமலை	ரூ.12,000/-	தகுந்த முகாந்திரம் கூறியதால் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

	மாவட்டம் (கைபேசி எண்.9751270476)		
2.	திரு.தா.இராஜ்குமார், வயது.50/2026, த/பெ நாஸ், எண்.20ஏ, வடக்கு தெரு, சின்னக்கடை தெரு, திருவண்ணாமலை. (கைப்பேசி எண். 8838568116)	ரூ.300/-	-do-
3.	திரு.அ.அஜய்தேவகன், வயது.25/2026, த/பெ ஆனந்த், எண்.8,4/4, பாரதி நகர், போளூர் ரோடு, திருவண்ணாமலை (கைபேசி எண்.96555094294) அஜய் ஆனந்த் ஓட்டுநர் பயிற்சி பள்ளி இடைத்தரகர் (உரிமையாளர் திரு.ஆனந்த் என்பவரின் மகன்)	ரூ.800/-	தகுந்த முகாந்திரம் கூறாததால் கைப்பற்றப்பட்டது.
4.	திரு.அ.அப்துல்ஹகீம், வயது.56/2026, த/பெ அப்துல்ஹமீது, எண்.72, முகல்புறா தெரு, திருவண்ணாமலை (கைபேசி எண்.9952782511) ஜெயம் ஓட்டுநர் பயிற்சி பள்ளி இடைத்தரகர் (பணி செய்பவர்)	ரூ.500/-	-do-
5.	திரு.செ.அருள், வயது.53/2026, த/பெ செல்வராஜ், எண்.28/12, LGGS நகர், போளூர் ரோடு, திருவண்ணாமலை (கைபேசி எண்.9894879188) அருள் ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளர்.	ரூ.5000/-	-do-
	கைப்பற்றப்பட்ட தொகை	மொத்தம்	6300/-

மேற்கண்ட திடீர் சோதனையின் போது வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செய்ய வேண்டிய பணிகளுக்கு வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு சேர வேண்டிய கையூட்டு பணத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு எதிரே செயல்பட்டு வரும் ஓட்டுநர் பயிற்சி பள்ளி

அலுவலகங்களில் வசூலிப்பதாகவும், மேலும் அலுவலக பதிவேடுகள் மற்றும் முத்திரைகள் அவர்கள் பராமரிப்பில் இருப்பதாகவும் கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மேற்கண்ட திரு.அ.அஜய்தேவகன், திரு.அ.அப்துல்ஹகீம் மற்றும் திரு.செ.அருள் ஆகியோர்களை அழைத்துக்கொண்டு தனிவட்டாட்சியர் திரு.ஜெகதீசன் அவர்கள் மற்றும் குழுவினர்களுடன் தனித்தனியாக சென்று அவரவர் ஒட்டுநர் பயிற்சி பள்ளிகளை சோதனை செய்து பார்த்த போது அலுவலக கோப்புகள், அலுவலக முத்திரைகள் அதனுடன் சந்தேகத்திற்கு இடமாக வைக்கப்பட்டிருந்த பணம் ஆகியன இருந்தது. அதுகுறித்து மேற்கண்ட இடைத்தரகர்கள் மற்றும் உரிமையாளரிடம் விசாரிக்க தகுந்த முகாந்திரம் கூறாததால் அரசு சாட்சி திரு.இர.ஜெகதீசன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

வ. எண்	சோதனை மேற்கொண்ட இடம்	சோதனையின் போது உடனிருந்த நபர்	கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் / முத்திரைகள்	கைப்பற்றப்பட்ட பணம்
1.	அருள் ஒட்டுநர் பயிற்சி பள்ளி, வேலூர் சாலை, வேங்கிக்கால், திருவண்ணாமலை	திரு.செ.அருள், வயது.53/2026, த/பெ செல்வராஜ், எண்.28/12, LGGS நகர், டோலூர் ரோடு, திருவண்ணாமலை	1).ஒட்டுநர் உரிமம் அசல் - 8 மற்றும் 2).திருவண்ணாமலை வட்டார போக்குவரத்துஅலுவலகம் சம்மந்தப்பட்ட முத்திரைகள்- 3	2200/-
2.	ஜெயம் ஒட்டுநர் பயிற்சி பள்ளி, எண்.1, மகாகணபதி நகர், வேங்கிக்கால், திருவண்ணாமலை	1). திரு.கே.வெற்றிவேல், வயது.58/2026, த/பெ கண்ணையன், 1790/சி, தெய்வசிகாமணி நகர், கோட்டம்பாளையம் ரோடு, வேங்கிக்கால், திருவண்ணாமலை (9842420485) மற்றும் 2).திரு.அ.அப்துல்ஹகீம், வயது.56/2026, த/பெ அப்துல்ஹமீது, எண்.72, முகல்புறா தெரு, திருவண்ணாமலை	1).ஒட்டுநர் உரிமம் அசல் - 16, 2).T.O.Form TN32BC9183 (NCB) நகல்(1 to 30) மற்றும் 3).அலுவலக கோப்பு ந.க.எண்.53103/B2 /2022, 54741/B2/2022 (1 முதல் 40 பக்கங்கள்)	6800/-

3.	அலுப் ஆனந்த் ஒட்டுநர் பயிற்சி பள்ளி, 34,35 குறிஞ்சிநகர், வேங்கிக்கால், திருவண்ணாமலை	திரு.அ.அலுப்தேவகன், வயது.25/2026, த/பெ ஆனந்த், எண்.8,4/4, பாரதிநகர், போளூர் ரோடு, திருவண்ணாமலை	1).TN137851 – T.O. Form (1 to 10) 2).Police Verification Form for Badge (1 to 6), 3).RC renewal – 2 (1to 4), 4).Equitas Finance (TN30CW1818) Cancelation (1 to 10), 5).Sri Ram Finance Cancelation (TN25CC8656) (1 to 14), 6).Permit Surrender TN 25BA0221 (1 to 12) அசல் ஆவணங்களின் நகல்கள் எடுத்து கைப்பற்றப்பட்டது.	4700/-
			மொத்தம்	13700/-

பின்னர் திருவண்ணாமலை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் அனைத்து அறைகளிலும் முழுமையான சோதனை செய்யப்பட்டது. தரைதளத்தில் உள்ள தற்போது பயன்பாட்டில் இல்லாத கணினி அறையினுள் சென்று சோதனை செய்ய மேற்கு பக்கம் அமைந்துள்ள வடக்கு பக்கம் உள்ள அலமாரியில் கட்டாக பணம் ரப்பர் பேண்ட் போட்டு வைக்கப்பட்டிருந்தது அதை எடுத்து தனிவட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில் எண்ணிப்பார்க்க அதில் ரூ.35,000/- கேட்பாரற்று இருந்தது. அலுவலகத்தில் இருந்தவர்களிடம் மேற்படி பணத்திற்கு யாரேனும் உரியவர்கள் உள்ளீர்களா என்று விசாரிக்க யாரும் பணத்திற்கு உரிமை கோரி முன்வராததால் மேற்படி தொகையை கணக்கில் வராத பணமாக கைப்பற்றப்பட்டது. அதன்பிறகு முதல் தளத்தில் படிக்கட்டுக்கு வலது புறம் மேற்கு பக்கம் அமைந்துள்ள ஆவணங்கள் உள்ள அறையினுள் சோதனை செய்ய அங்கு கலைந்த நிலையில் இருந்த பதிவேடுகளை விலக்கி பார்த்த போது பதிவேடுகளுக்கு இடையில் கட்டாக பணம் இருந்தது அதை எடுத்து தனிவட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில் எண்ணிப்பார்க்க அதில் ரூ.20,000/- கேட்பாரற்று இருந்தது. அலுவலகத்தில் இருந்தவர்களிடம் மேற்படி பணத்திற்கு யாரேனும் உரியவர்கள் உள்ளீர்களா என்று விசாரிக்க யாரும் பணத்திற்கு உரிமை கோரி முன்வராததால் மேற்படி தொகையை கணக்கில் வராத பணமாக கைப்பற்றப்பட்டது. பின்னர் வட்டார போக்குவரத்து

அலுவலர் திரு.கி.கருணாநிதி அவர்களின் பயன்பாட்டில் உள்ள அரசு வாகனம் TN 25 AG 2525 என்ற பொலிரோ ஜீப்பை அரசு சாட்சி திரு.இர.ஜெகதீசன் அவர்கள் முன்னிலையில் சோதனையிட அதில் பணம் மற்றும் ஆவணங்கள் ஏதும் புலப்படவில்லை. பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.கி.கருணாநிதி அவர்களிடம் அலுவலக வருகைப்பதிவேடு மற்றும் தனிநபர் கையிருப்பு பதிவேடு பற்றி கேட்க, அவர் அந்த பதிவேடுகளை எடுத்து வந்து கொடுத்ததை பார்க்க, வருகை பதிவேடு-2026 1 முதல் 79 பக்கங்களாக இருந்தது, அதில் ஜூன் மாதத்திற்கான பக்கம் 13 மற்றும் 14 ஆகியவற்றை நகலெடுத்தும், தனிநபர் கையிருப்பு பதிவேடு-2026 பார்க்க 1 முதல் 272 பக்கங்களாக இருந்தது, அதில் 18.06.2026-ஆம் தேதிக்கான பக்கம் 112-ஐ நகல் எடுத்தும் மற்றும் 18.06.2026-ஆம் தேதி பதிவான வாகனங்கள் குறித்து கேட்க, வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்கள் இணையதளம் மூலம் நகல் எடுத்து ஆஜர் செய்ததில் இன்று மட்டும் 70 இருசக்கர வாகனங்களும், 1 நான்கு சக்கர வாகனமும் பதிவு செய்யப்பட்டன, அதற்கான விவரங்களுடன் கூடிய 4 பக்க தாள்கள் என அனைத்து ஆவணங்களிலும் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.கி.கருணாநிதி, தனிவட்டாட்சியர் (குறைவு முத்திரை கட்டணம்) திரு.இர.ஜெகதீசன் மற்றும் காவல் ஆய்வாளர் திரு.இரா.அருள்பிரசாத் ஆகியோர் கையொப்பம் செய்து விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்சொன்ன திடீர் தணிக்கையின் போது அலுவலகத்தில் கையூட்டாக பெறப்பட்டு சந்தேகத்திற்கிடமான வகையில் கேட்பாரற்று கிடந்த பணம் ரூ.55,000/- மற்றும் அலுவலகத்தில் இருந்த இடைத்தரகர்களிடமிருந்து கையூட்டு கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதப்படும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.6,300/-மும், பின்னர் ஓட்டுநர் பயிற்சி பள்ளிகளில் முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்திற்கு இடமான கையூட்டு பணம் ரூ.13,700/- ஆக மொத்தம் ரூ.75,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது யாருக்கும் மனதளவிலோ, உடலளவிலோ எந்த துன்புறுத்தலும் ஏற்படுத்தவில்லை. மேலும், அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுக்கோ, பொருட்களுக்கோ எந்தவித சேதமும் ஏற்படுத்தவில்லை. பின்னர் மேற்படி திருவண்ணாமலை வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் தணிக்கை 18.06.2026-ஆம் தேதி இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. அந்த செயல்முறையில் நானும், வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.கி.கருணாநிதி, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.P.பெருமாள், காவல் ஆய்வாளர்கள் திரு.இரா.அருள்பிரசாத் மற்றும் திருமதி.A.ஹேமாமாலினி ஆகியோர் கையொப்பம் செய்து இந்த செயல்முறையின் நகல் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும்

மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 அவர்களுக்கும் வழங்கப்பட்டது. மேலும் வழக்கு நிமித்தமாக கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத மற்றும் கேட்பாரற்று கிடந்த கையூட்டு தொகை என சந்தேகத்திற்கிடமான வகையில் இருந்த பணம் மொத்தம் ரூ.75,000/-மும், ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் இருந்த அரசு ஆவணங்கள் மற்றும் முத்திரைகள் ஆகியவற்றுடன் இணைத்து புகார் மனு கொடுக்கிறேன். புகார் மனுவின் பேரில் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/-R.Jagadeesan, Spl.Tahsildar (Stamps), Tiruvannamalai 19.06.2026

Sir/Madam,

Received the complaint on 19.06.2026 at 18.30 hrs and a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.05/2026 u/s 7, 7 r/w 12 of PC Act 1988 as amended by the PC (Amendment) Act 2018, on 19.06.2026 at 19.00 hrs.

(Sd/-XXXXX) இரா.அருள்பிரசாத், கா.ஆ 19.06.2026 காவல் ஆய்வாளர், ஊ.த.க பிரிவு, திருவண்ணாமலை

The FIR in original along with the complaint is being sent to the Hon'ble Principal District and Sessions Judge, Tiruvannamalai and the other copies to the officers concerned.